[2003 ஜனவரி 30

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்திற்கும், தேனி மாவட்டத்திற்கும், வேலூர் மாவட்டத்திற்கும் மருத்துவக் கல்லூரி தந்த அந்த பெருந்தகை எங்கள் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை பணிந்து வணங்குகிறேன்.

எங்களுடைய மாவட்டம் தொடர்பான சில கோரிக்கைகளை உங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளை நீங்கள் பார்த்து. அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொன்னீர்கள். ஒரு நீதிமானாக, நீதி அரசராக இருக்கிற மாண்புமிகு சபாநாயகர் அவர்களை நான் இதயபூர்வமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். சில கோரிக்கைகளை மாத்திரம் சொல்லி, என்னுடைய உரையை நிறைவு செய்யலாம் என்று கருதுகிறேன்.

வேளாங்கண்ணி பகுதியிலே உள்ள கோவிலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு நான் சென்றிருந்தேன். அங்கேயுள்ள பங்கு தந்தை மற்றும் கன்னியர்கள் என்னிடம் ஒரு கோரிக்கையை வைத்தார்கள். அந்தப் பகுதியிலே முதியோர், உடல் ஊனமுற்றோர், மனநலம் குன்றியோர், இப்படிப்பட்டவர்கள் சுமார் 200, 300 பேர்களுக்கு சாப்பாடு அளித்து, ஹாஸ்டல் நடத்தி வருகிறார்கள். அங்கே அவர்களுக்கு ஒரு நாளைக்கு 20 கிலோ அரிசி இவ்வளவு நாட்களாகக் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் திடீரென்று அதை 15 கிலோவாகக் குறைத்திருக்கிறார்கள்.

9. உரிமைப் பிரச்சினை திரு. பரிதி இளம்வழுதி மீது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள். அவை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றபோது பரிதி இளம்வழுதி அவர்கள் அவருடைய இடத்தை விட்டு மீறிச் சென்று, இடையிலே இருந்த சட்டமன்ற உறுப்பினர்களையும் தள்ளிவிட்டு, சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த டாக்டர் குமாரதாஸ் அவர்களை, 'நீ வெளியே வா; சென்னைக்கு வா, உன்னை நான் கொலை செய்கிறேன்' என்கிற அளவிற்குப் பேசியிருப்பது, மிகவும் வருந்தத்தக்கது; அது கண்டிக்கத்தக்கது. ஆகவே பரிதி இளம்வழுதி மீது நீங்கள் சொன்ன அந்தக் குற்றச்சாட்டின் மீது ஆய்ந்து அறிக்கை அளிக்க வேண்டுமென்கிற விண்ணப்பத்தோடு அவை உரிமைக் குழுவிற்கு அனுப்பி வைக்கிறேன்.